யாழ்ப்பாணம்

சட்டவிரோத வாக்களிப்பு இடம்பெற்றதாக எதிர்க் கட்சிகள் அரசுக்கு எதிராக குற்றச்சாட்டு

(கொழும்பு)

நேற்று நடைபெற்ற மாகாணசபைத் தேர்தலில் சட்டவிரோதமான வாக்களிப்பு பரவலாக இடம்பெற்றதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன. கள்ளவோட்டு, மற்றவர்களின் வாக்குகளைப் பாவித்தது, எதிர்க்கட்சி ஆதரவாளர்களை மிரட்டியது போன்ற சம்பவங்கள் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களாலும்,

(2-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU

NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 வைகாசி 5 இதழ் 92

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 18 — 05 — 1993

550 முறைப்பாடுகள் பொலிசாருக்கு கிடைத்தன

(கொழும்பு)

தேர்தல் வன்முறை தொடர்பாக 550 முறைப்பாடுகள் தமக்கு இதுவரை கிடைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். சொல்ல செய்வதற்கு முறை

(4-ம் பக்கம் பார்க்க)

இரத்தினபுரியில் தாக்கு 7 பேர் காயம்

(கொழும்பு)

இரத்தினபுரியில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான ஆதரவாளர்கள் அதிகமான கிராமமொன்றுக்குச் சென்ற வசந்தபுஞ்சிநிலமே தலைமையிலான கோஷ்டி ஒன்று தாக்குதல் நடத்தியதில் 7 பேர் காயமடைந்தனர். இவர்களில்

(4-ம் பக்கம் பார்க்க)

★ மாகாண சபைத் தேர்தல்:

ஐ. தே. க.வுக்கு வெற்றி வாய்ப்பு

சிறிமா கட்சியும் கடும் போட்டி!

தபால் மூலம் வாக்களிப்பில் ஐக்கியதேசியக் கட்சி முன்னணியில்

(கொழும்பு)

நேற்று நடைபெற்ற மாகாணசபைத் தேர்தலில் ஆளும் கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி வெற்றி பெறும் வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளதாக இதுவரை வெளிவந்த தபால்மூலம் தேர்தல் வாக்களிப்பு முடிவுகளிலிருந்து தெரிய வருகிறது. எனினும் எதிர்க்கட்சித்தலைவி திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணியும் வெற்றி வாய்ப்பை இன்னும் இழந்துவிட வில்லையென்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை வெளிவந்த தபால் மூல வாக்களிப்பில் ஐக்கிய தேசியக்கட்சி முன்னணியில் திகழ்கிறது திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான முன்னணி இரண்டாவது இடத்தைப்பெற்றுள்ளது.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி இதுவரை அறிவிக்கப்பட்ட முடிவுகளிலெந்த ஒரு இடத்தைப் பெறாவிட்டாலும் குறிப்பிடத்தக்க அளவு வாக்குகளைப் பெற்றுள்ளது.

75 சதவீத மக்கள் வாக்களித்தனர்

(கொழும்பு)

நேற்றைய தேர்தலில் 70 முதல் 75 வீதமான மக்கள் வாக்களித்துள்ளதாகத் தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா அறிவித்துள்ளார்.

தபால் வாக்குகள் எண்ணும் வேலைகள் முதலில் குருநாகல் மாவட்டத்தில் ஆரம்பமானதாகவும், மற்றைய மாவட்டங்களின் வாக்குகள் இரவு 10-00 மணிக்குப் பின் எண்

(4-ம் பக்கம் பார்க்க)

துப்பாக்கியைக் காட்டி அமைச்சர் பெஸ்டஸ் மிரட்டல்

(கொழும்பு)

அமைச்சர்கள் பெஸ்டஸ் பெரேரா, விஜேபால மெண்டிஸ் ஆகியோர் பொதுமக்களை அச்சுறுத்தியதாக பொலிசாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொது நிர்வாக அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா வென்னப்புவையைச் சேர்ந்த அஜித் லக்ஷ்மன் பெர்னாண்டோ என்பவருக்கு கைத்துப்பாக்கி (பிஸ்டல்) ஒன்றைக்காட்டி அச்சுறுத்தியதாக அஜித் லக்ஷ்மன் பெர்னாண்டோ வென்னப்புவ பொலிஸில் புகார் செய்துள்ளார்.

அமைச்சர்களுடன் வந்த கோஷ்டி ஒன்று தமது வீட்டிற்கு முன்னால் ஒட்டியிருந்த

(2-ம் பக்கம் பார்க்க)

தேர்தல் முடிவுகள் நாட்டின் எதிர்காலத்தை பாதிக்கும்

பி. பி. ஸி. கணிப்பு

(லண்டன்)

இலங்கையின் மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் முற்று முழுதாக வெளிவந்ததும் நாட்டின் எதிர்காலமும் அது செல்லும் வழியும் பெரிதும் பாதிக்கப்படக்கூடுமென்று பி. பி. ஸி. நேற்று அதன் செய்திக்கண்ணோட்டத்தில் தெரிவித்தது.

மேற்படி தேர்தலில் எதிர்க்கட்சிகள் ஒருமாகாணசபையின் ஆட்சியைக் கைப்பற்றினாலும் அதை ஒரு தளமாகக்

(4-ம் பக்கம் பார்க்க)

★ முதல் தேர்தல் முடிவில் ஐ. தே. க. வெற்றி

(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தலின் முதல் முடிவு நேற்று நள்ளிரவு 12-40 மணியளவில் அறிவிக்கப்பட்டது.

வடமத்திய மாகாணத்தின் பொலநறுவைமாவட்ட தபால் வாக்களிப்பு முடிவுகளே முதலில் அறிவிக்கப்பட்டன.

(4-ம் பக்கம் பார்க்க)

காலி மாவட்டம் சிறிமா கட்சி வெற்றி

தெற்கு மாகாணம்: காலி மாவட்டம் தபால்வாக்களிப்பு முடிவு வருமாறு:

பொதுசன ஐக்கிய முன்னணி:	3605
ஐ. தே. க.	2503
ஐ. ஐ. தே. மு.	1098
சுயேட்சைக் குழு 1	76
நவசமசமாஜக்கட்சி	57

பதியப்பட்ட மொத்த வாக்குகள் 7,713.

அளிக்கப்பட்ட வாக்குகள் 7,424. (இ)

கண்டி மாவட்டம் ஐ. தே. க. வெற்றி

மத்திய மாகாணம்: கண்டி மாவட்ட தபால் மூலவாக்களிப்பு முடிவுகள் வருமாறு.

ஐ. தே. க	3529
பொதுசன ஐக்கிய முன்னணி	3384
ஐ. ஐ. தே. மு.	2868
நவசமசமாஜக் கட்சி	49
ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்	27

பதியப்பட்ட மொத்த வாக்குகள் 10,505.

பதிவான வாக்குகள் 10151. (இ)

புத்தளம் மாவட்டம் ஐ. தே. க. வென்றது

வடமேல் மாகாணம் புத்தளம் மாவட்டம் தேர்தல் முடிவுகள் வருமாறு:

ஐ. தே. க.	523
பொதுசன ஐக்கிய முன்னணி	478
ஐ. ஐ. தே. மு.	251
நவசமசமாஜக்கட்சி	18

ஸ்ரீலங்கா முஸ்லிம்

(4-ம் பக்கம் பார்க்க)

எதிரணி பிரதிநிதியுடன் அமைச்சர் மோதல்

(கொழும்பு)

தொலைத்தொடர்புகள் அமைச்சர் ஏ. எம். அதிகாரி அநுராதபுர மாவட்டத்திலுள்ள வாக்களிப்பு நிலையம் ஒன்றில் பொதுசன ஐக்கிய முன்னணி பிரதிநிதியை வெளியில் இழுத்ததாக தெரிவிக்கப்படுகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

வரிவிளம்பரம்

சோதிடம்

பன்னூலையில் ஜாதகம் எழுதித் தந்தவர்கள் தற்பொழுது இ. சபாரத்தினக்குருக்கள் 333/1 ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு, நல்லூர் என்ற முகவரியில் பெற்றுக் கொள்ளலாம். (சி-115)

PITAWAKKA PLUS

மதுபானத்தால் ஏற்படும் சரும வியாதிகளுக்கும் - வேறு மருந்துகளால் உடலில் ஏற்படும் நச்சுத்தன்மைகளுக்குமாக 9 வகை மூலிகைகள் அடங்கியது. கிடைக்குமிடம்: எஸ். ரி. மெடிக்கல்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (எ-112)

வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், வலிப்புநோய், பீநிசம், தலைபிடி, தலை காலவியல், சருமநோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக் குறைவு மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியகலாநிதி சி. இராசரத்தினம் 121, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (சி-113)

மணமகன் தேவை

யாழ். நகர் இந்து A/L சித்தியடைந்த பெண்ணுக்கு மணமகன் தேவை. வயது 24. உயரம் 5' 5'' ஆயிலியம் 3ம் பாதம் கிரகபாவம் 12/16, 4ல் செவ்வாய், பட்டதாரி. வங்கி, திணைக்களம், தனியார்துறையில் நல்ல பதவியில் இருப்போர், வெளிநாட்டில் பணியாற்றும் பட்டதாரி விரும்பத்தக்கது. சகல விபரங்களுடனும் சாதகக் குறிப்பையும் அனுப்பிவைக்கவும். விளம்பர இல. சி 98, மே/பா: ஈழநாடு, யாழ்ப்பாணம். (சி-98)

இராசி பலன்

18-05-1993

செவ்வாய்க்கிழமை

(தமிழுக்கு வைகாசி 05)

துவாதசி பி. ப. 4-53 வரை ரேவதி மு. இ. 9-21 வரை. பிரதோஸ விரதம் இராகுகாலம் பி. ப 2-53 முதல் 4-23 வரை சுபநேரம் காலை 10-23 முதல் 11-53 வரை சித்தாமிர்தயோகம்.

மேடம்: தொழில் முடக்கம் சகோதர பகை, அலைச்சல்.

இடபம்: வருவாய் அதிகரிப்பு, தெய்வசிந்தனை, மனமகிழ்ச்சி.

மிதுனம்: புதிய நண்பர், தொழில் சிறப்பு, பயணம்.

கடகம்: வேண்டாத தொல்லை, மரமனுரி துன்பம், கடன்.

சிம்மம்: வீட்டில் தொல்லை, அந்நியர் உதவி, மனசஞ்சலம்

கன்னி: களிப்பூட்டும், சம்பவம், தொழில் போட்டி, இலாபம்

துலாம்: செல்வந்தர் சகாயம், சுபகாரியம், காரியசித்தி

விருச்சிகம்: குடும்பபகை, மனவிரக்தி, பழைய நினைவுகள்.

தனுசு: முயற்சித்தடை, பணியாள் வெறுப்பு, இடைஞ்சல்.

மகரம்: கடமை உணர்வு, பொதுப்பணி, உல்லாச வாழ்வு.

கும்பம்: அற்பர் நேசம், இனசன விரோதம், உடல் அசதி.

மீனம்: புதிய முயற்சி, விருந்துபசாரம் வெளியூர், செய்தி.

— ஜோதிடர்

காணவில்லை

சிவப்பு நிறமான, வயிற்றில் வெள்ளைப் புள்ளி கொண்ட S. A. குறியிடப்பட்ட ஜெசி. இன பசு மாடு ஒன்று கடந்த 23-ந் திகதி முதல் காணமல் போய்விட்டது. பெரிய பட்டி பார்த்த கொம்பை உடைய இப் பசு மாட்டைக் கண்டு பிடித்து தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். திருமதி யோகவதி, அரசினர் ஆதார வைத்தியசாலை, மந்திகை, புலோலி. (சி-122)

மத்திய கல்லூரி றொறன்ரோ கிளை

(கொழும்புத்துறை)

யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர்கள் கனடாவில் ரொன்ரோ பிறிடிக்ரவுண் கிறிஸ்தவ ஆலய மண்டபத்தில் கூடி யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ரொறன்ரோ கிளையை அங்குரார்ப்பணம் செய்துவைத்தனர். 154

ஆரம்ப பாடசாலை

(தாளையடி)

கட்டைக்காடு-வெற்றிலைக்கேணி இராணுவ நடவடிக்கை காரணமாகக் கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி, போக்கறுப்பு, கேவில் கிராமங்களிலிருந்து இடம் பெயர்ந்து சுண்டிக்குளம், பூனைத்தொடுவாய் பகுதிகளில் தங்கியுள்ள பாடசாலை மாணவர்களின் நலன் கருதி, இரண்டு ஆரம்ப பாடசாலைகளை முல்லை மாவட்டக் கடற்புலிகள் பிரிவினர் அமைத்துள்ளனர். (163

அபாயப்படி கொடுப்பனவு

(ஆனைப்பந்தி)

1989ம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் யூன் மாதம் வரையான ஆறுமாத காலப்பகுதியில் கடமையாற்றிய புங்குடுதீவு நயினாதீவு பலநோக்குகூட்டுறவுச்சங்க ஊழியர்களுக்கான அபாயப்படி கொடுப்பனவு அடுத்தவாரம் வழங்கப்படும் என தெரியவருகிறது. (101)

வில்லூன்றி புனித தீர்த்தம்

அறிவித்தல்

வில்லூன்றி புனித தீர்த்தம் துப்பரவு செய்வதற்காக 19-5-93 காலை 7 மணிமுதல் 21-5-93 முற்பகல் 10 மணிவரை பொதுமக்கள் பாவனைக்கு மூடப்பட்டிருக்கும்.

வில்லூன்றி விநாயகர் தேவஸ்தான வருடாந்த மகோற்சவ தீர்த்தோற்சவம் 21-5-93 முற்பகல் 10 மணிக்கு மோட்ச தீர்த்தத்தில் நிறைவுற்றவுடன், மோட்சதீர்த்தம் வில்லூன்றி புனித தீர்த்தத்தில் சங்கமிக்கும். அதுசமயம் முதல் வில்லூன்றி புனித தீர்த்தத்தில் தீர்த்தமாட பொதுமக்கள் மீண்டும் அனுமதிக்கப்படுவர்.

குறிப்பு: அந்தியேட்டி மடத்தில் கிரிகைகள் வழமை போல செய்து கொள்ளலாம்.

செயலாளர்.

வில்லூன்றி புனித தீர்த்த பரிபாலன சபை

வில்லூன்றி,
17-05-93

(சி 121)

1-ம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

விஸ்வநாதன் அமிர்தலிங்கம்

தோற்றம்: 23—03—1933

மறைவு: 29—05—1992

திதி: 18—05—1993

ஓராண்டு முடிந்தாலும்
ஓராயிரம் ஆண்டு கழிந்தாலும்
எங்கள் இதயத்தில் - உங்கள்
நினைவு என்றுமே அழியாது!

தங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்!

மனைவி: இராசம்மா

பிள்ளைகள்: பிரபகலா, மிதுனா

பழவத்தை,
வல்வெட்டி.

(சி 120)

சட்டவிரோத

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொலிசாரினாலும் மேற்கொள்ளப்பட்டதாக எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளன.

இந்த சட்டவிரோத சம்பவங்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தாம் ஏற்கனவே அறிவித்துவிட்டதாகவும் எதிரணிப் பேச்சாளரான டாக்டர் விக்கிரம வீரசூரியா தெரிவித்தார்.

மத்திய கொழும்பு தேர்தல் தொகுதியில்வாக்காளர்களின் வாக்குகளை விலைக்கு வாங்கியதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தப் பகுதியில் வாக்காளர்களின் ஆதரவைப் பெறுவதற்காக அரசாங்க தரப்பு ஆதரவாளர்களால் அவர்களுக்கு ஒரு உணவுப் பார்சல், ஒரு கிளாஸ் சாராயம் மற்றும் 20 ரூபா பணம் வழங்கப்பட்டதாகவும் இதனை நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

கடுகண்ணாவ, குருநாகல் ஆகிய பிரதேசங்களில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிக்கு சொந்தமான வாகனங்கள் பொலிஸாரினால் பலவந்தமாக அபகரிக்கப்பட்டதாக ஜ ஐ. தே. முன்னணித் தலைவர் திரு. காமினி திஸாநாயக்கா தெரிவித்தார். (சீ-இ)

துப்பாக்கியைக்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் சுவரொட்டிகளை கிழிக்க ஆரம்பித்த போது இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளையில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் சார்பில் போட்டியிடும் தாம் உட்படச் சகல வேட்பாளர்களையும் கொலை செய்துவிடுவதாகப் பொலிஸ் அதிகாரி ஒருவர் அச்சுறுத்தியதாக ஜ ஐ தே. முன்னணி வேட்பாளர் லக்ஷ்மன் செனிவிரத்ன தெரிவித்துள்ளார். இ)

மாதாந்த கலை நிகழ்வு

இடம்: கோண்டாவில் மாவட்டச் செயலகம்
மாவீரர் கலையரங்கு

காலம்: 19 - 05 - 93

நேரம்: 7-00 மணி

சிறப்பு நிகழ்வு

விடுதலைப்புலிகள்
கலை பண்பாட்டுக் கழகத்தினரால்
புதிதாக தயாரிக்கப்பட்ட

"ஊரெங்கும் போர்ப்பாட்டு"

"கிராமத்துக் காற்று"

இவற்றுடன்
இசைக்கச்சேரியும் நடைபெறும்
அனைவரையும் அன்புடன் வரவேற்கின்றோம்.

(சி- 3133)

அரசினர் பொது வைத்தியசாலை

யாழ்ப்பாணம்

பதவி வெற்றிடம்

இவ்வைத்தியசாலையில் அமைய/ஆங்கில சுருக்கெழுத்தாளர் (CASUAL STENOGRAPHER) பதவி ஒன்றுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமைகள்:

1. க. பொ. த. (சா/த) பரீட்சையில் அல்லது கி. பொ. த. பரீட்சையில் இரு தடவைக்கு மேற்படாத அமர்வுகளில், தமிழ் மொழி, ஆங்கில மொழி, கணிதம் உட்பட குறைந்தது நாலு பாடங்களில் திறமைச் சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
2. அரசாங்க தொழில்நுட்பக் கல்லூரியில் ஆங்கில சுருக்கெழுத்து, தட்டெழுத்துப் பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

   அல்லது

   க. பொ. த. (சா/த), கி. பொ. த. பரீட்சையில் சுருக்கெழுத்துப் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
3. 31-05-93ல் பதினெட்டு வயதுக்கு மேற்பட்டவராகவும், நாற்பது வயதுக்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் எனது பணிமனையில் 31-05-93 வரை ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பதாரர்கள் பின்பு எண்ணால் அறிவிக்கப்படும் திகதியில் எனது பணிமனையில் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

தெரிவு செய்யப்படுபவர்களுக்கு அமைய அடிப்படையில் நியமனமும், அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ள புதிய சம்பள விகிதப்படி சம்பளமும் வழங்கப்படும்.

பணிப்பாளர்.

வைத்திய கலாநிதி

(எ 3134) செல்வி என். கனகரெட்ணம்.

யாழ்ப்பாணம்

டி. யு. என். எவ்வுடன் உறவு

ஜனாதிபதி மறுப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா கொலைசெய்யப்பட்ட பின்னர் ஐ. தே. க.வுக்கும் ஜனநாயக ஐக்கிய முன்னணிக்கும் இடையில் இணக்கம் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுவதை ஜனாதிபதி விஜயதுங்கா மறுத்துள்ளார்.

ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு எதிராக குற்றப் பிரேரணை கொண்டுவந்த சிலர் ஐ. தே. க.விலிருந்து விலக்கப்பட்டனர். இவர்களுடன் மீண்டும் இணக்கம் எதுவும் ஏற்படவில்லை என்றும் கூறினார்.

இதேவேளை லலித் கட்சி உறுப்பினர்கள் சிலர் ஐ. தே. க.வினுள் பின்கதவால் நுழைய முயற்சிப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (இ)

சேபால ஆட்டிகல

ஏயர் லங்காவின் புதிய பணிப்பாளர்

(கொழும்பு)

ஏயர் லங்காவின் புதிய பணிப்பாளராக பிரிட்டனிலுள்ள இலங்கை தூதர் ஜெனரல் சேபால ஆட்டிகல மே மாதம் 25ம் திகதி பதவியேற்கவுள்ளார்.

ஏயர் லங்காவின் தற்போதைய பணிப்பாளர்சபை மே 24ம் திகதி ராஜினாமா செய்யவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய பணிப்பாளர் சேபால ஆட்டிகல இவ்வார இறுதியில் பிரிட்டனிலிருந்து நாடு திரும்பவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை இருந்த பணிப்பாளர்சபை பிரேமதாசாவின் நெருங்கிய ஆதரவாளர்கள் எனவும் கூறப்படுகிறது. (இ)

சமய அறிவுப் போட்டி

[மானிப்பாய்]

ஆனைக்கோட்டை உயரப்புலம் உத்துங்க விநாயகர் ஆலய மஹோற்சவ காலத்தில் நடைபெற்ற பெரிய புராணத் தொடர் விரிவுரையை அடிப்படையாக வைத்து சமய அறிவுப் போட்டியொன்று அண்மையில் அவ்வாலய தேர்த்திருவிழாவன்று நடைபெற்றது. (71)

மாகாணசபை உறுப்பினர் அடுத்த வாரம் பதவியேற்பர்

கொழும்பு)

புதிதாக தெரிவு செய்யப்படும் மாகாணசபை உறுப்பினர்கள் அடுத்த வாரமளவில் பதவிப்பிரமாணம் செய்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இத்தேர்தலில் வெற்றி பெறும் உறுப்பினர்கள் மாகாண ஆளுநர்கள் முன்னிலையில் 'அடுத்த வாரமளவில் பதவிப்பிரமாணம் செய்துகொள்வார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி ஏனைய விடயங்கள் அடுத்த சில தினங்களில் வெளியிடப்படுமெனவும் கூறப்படுகிறது. (இ)

லலித் கொலையாளியை அறுவர் இனம் காட்டினர்

(கொழும்பு)

லலித் கொலையாளியை அறுவர் இனம் காட்டியதாக குற்றப் புலனாய்வு பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

லலித்தை சுட்டுக்கொன்றதாக கூறப்படும் கந்தையா ரகுநாதனை ஏற்கனவே ஆறு சாட்சிகளில் அடையாளம் காட்டியுள்ளதாகவும் இக் கொலைக்கு மூன்று நாட்களின் முன்னர் கந்தையா ரகுநாதனை பொலிஸ் தேடிக் கொண்டு வந்ததாக கூறப்படும் தகவலையும் அவர் மறுத்தார்.

கிருலப்பனையில் பொலிசில் ரகுநாதன் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது ரகுநாதனின் குடும்ப உறவினர்கள் பொலிசில் வைத்து அவரை பார்த்ததாக கூறப்படுவதையும் அந்த அதிகாரி மறுத்தார். [சி]

விளையாட்டு உத்தியோகத்தர்

பற்றுக்குறையை நீக்க நடவடிக்கை எடுக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் விளையாட்டு உத்தியோகத்தர்களுக்கான பற்றுக்குறையை நீக்குவதற்கு உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. வெகுவிரைவில் இவர்கள் நியமனம் செய்யப்படுவார்கள்.

கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற நல்லூர் பிரதேச செயலர் பிரிவுகளுக்குள் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடைபெற்ற தடகள விளையாட்டுப்போட்டியின் பரிசளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட வடக்கு-கிழக்கு மாகாணசபையின் விளையாட்டுப் பணிப்பாளர் மரியதாஸ் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் பேசுகையில் பிரதேச செயலகங்கள் இருக்கின்ற யாழ். மாவட்டத்திலே நான்கே நான்கு விளையாட்டு உத்தியோகத்தர்கள் மாத்திரம் கடமையாற்றுகின்றனர் இந்நிலை தொடராதிருப்பதற்கான நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ள இருக்கின்றோம். மேலும் யாழ் மாவட்டத்து விளையாட்டுத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பணத்தினை மிக விரைவில் இங்கு கிடைக்கவும் அவை விளையாட்டுத்துறைக்குப் பயன்படவும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் கூறினார். 61

★ மாகாணசபைத் தேர்தல்

பலத்த மழை காரணமாக வாக்களிப்பில் மந்தமான நிலை

(கொழும்பு)

நேற்று நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலில் நண்பகல் வரை பலத்த மழை காரணமாக வாக்களிப்பு மிகவும் மந்தமாகவே நடைபெற்றது.

கொழும்பு பகுதியில் வாக்களிப்பு ஓரளவு சுறுசுறுப்பாகவும் தெற்கின் பல பகுதிகளிலும் வாக்களிப்பு நிலையங்களில் மந்தமான வாக்களிப்பே நடைபெற்றது.

செய்திக்குறிப்பொன்று தெரிவிக்கையில், நண்பகல் வரை 20 வீதமான வாக்களிப்பே நடைபெற்றதாக குறிப்பிட்டது. தெற்கின் பல இடங்களிலும் பலத்த மழை பல மணிநேரமாக தொடர்ந்து பெய்தது. -இ

இன்று

(உடுவில்)

மருதனார்மடம் கல்விக் கோட்ட பாடசாலைகளின் மெய்வல்லுனர் போட்டிகள் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் மே மாதம் 21, 22-ம் திகதிகளில் நடைபெற உள்ளன.

விளையாட்டுப் போட்டி சம்பந்தமான கருத்தரங்கு ஒன்று ஸ்கந்தயாக் கல்லூரியில் இன்று 18-ந் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறும். (109)

0 0 0

(மானிப்பாய்)

சுதுமலை அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து நடைபெறும் இவ்வுற்சவத்தின் 21-ம் நாள் யூன் மாதம் 3-ந் திகதி வியாழக்கிழமை ரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (71

0 0 0

(வட்டுக்கோட்டை

வட்டுக்கோட்டை கொத்தணிப் பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த்தினப் போட்டிகள் கொத்தணி அதிபர் இ. டாஸ் தலைமையில் இன்று 18-ந் திகதி காலை வட்டுக்கோட்டை திருஞான சம்பந்தர் வித்தியாலயத்திலும் நாளை 19-ந் திகதி அராலி சரஸ்வதி மகாவித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளன. (139)

மிதிவெடியில் சிக்கி படுகாயம்

(யாழ்ப்பாணம்)

பெரியவிளான் பகுதியில் தமது வீட்டிற்குச் சென்று திரும்பிய இளம்யுவதி ஒருவர் மிதிவெடியில் சிக்கி பலத்த காயத்திற்குள்ளாகிய நிலையில் யாழ் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

செல்வி மேரி ஜெஸிந்தா அம்பேலஸ் (23 வயது) என்பவரே மிதிவெடியில் சிக்கி வலதுபாதம் சிதைந்த நிலையில் பலத்த காயத்திற்குள்ளாகியவராவர். (56)

சுயதொழில்

வேலைவாய்ப்பு மீளளிப்பு கடன்

(வட்டுக்கோட்டை)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள அகதி முகாம்களில் இருக்கும் கஷ்டப்பட்ட மக்கள் சுயதொழில் செய்து முன்னேறுவதற்காகவும் குடும்பத்தினரைக் கஷ்டமின்றி பாதுகாப்பதற்காவுமாக தலா 2ஆயிரம் ரூபா வீதம் மீளளிப்புக் கடனை கட்டுடையில் இயங்கி வரும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் வழங்கி வருகின்றது.

இதுவரை சுமார் 180 பேர் சுயதொழில் செய்வதற்கான மீளளிப்புக் கடனை அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்திடம் பெற்று சுயதொழில் செய்து வருகின்றனர். -139

இம்மாத இறுதியில்

தொலைக்கல்வி ஆசிரியர் பரீட்சை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு உட்பட நாட்டின் சகல பகுதிகளிலும் இம்மாத இறுதியில் தொலைக் கல்வி ஆசிரியர் பரீட்சை நடைபெறவுள்ளதாக பரீட்சை ஆணையாளர் கூறியுள்ளார்.

இப்பரீட்சையில் 28,000 மாணவ ஆசிரியர்கள் தோற்றவுள்ளனர். இப்பரீட்சை கல்வித்திணைக்களத்தினால் நடாத்தப்படும்.

பயிற்சிபெற்ற ஆசிரியர்களுக்கு நடாத்தப்படும் முதல் பரீட்சை இதுவாகும். (சி)

கலை இலக்கிய போட்டிகள் நடாத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சனசமூக நிலையங்களின் சமாசம் வழமை போல இம்முறையும் கலை, இலக்கியப் போட்டிகளையும் விளையாட்டுப்போட்டிகளையும் நடாத்தத்தீர்மானித்துள்ளது.

யாழ். மாநகர எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களை சேர்ந்தவர்கள் மட்டுமே இப்போட்டிகளில் பங்குபற்ற அனுமதிக்கப்படுவர்.

சிறுகதை, கவிதை, கட்டுரை பேச்சு, ஓவியம் பொது அறிவு முதலான கலை இலக்கியப்போட்டிகளும் எறிபந்து, கால்பந்து, வலைப்பந்து, தாச்சி முதலான விளையாட்டுப்போட்டிகளும் நடாத்தப்படவிருக்கின்றன.

20-06-93ல் நடைபெறவிருக்கும் விசேட பொதுக்கூட்டத்தில் இவை தொடர்பாக எல்லா ச. ச. நிலையங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. 161-இ

புனர்வாழ்வு நடவடிக்கை ஆய்வுப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

உழைப்பாளரை இழந்த பெண்களுக்கான புனர்வாழ்வு நடவடிக்கைகளை இனம்காண்பதற்கான ஆய்வுப்பட்டறை, நாளை 19ம், 20ம் திகதிகளில் காலை 9மணி முதல் 4-30 மணிவரை கொக்குவில் அமைந்துள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கலந்துரையாடல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட பிரதி ஆணையாளர் து. வைத்திலிங்கம், அகதிகள் புனர்வாழ்வு நிதிய உப தலைவர் எஸ். ஆர். முத்தையா, இ. இளங்கோ ஆகியோர் பங்குபற்றுவதோடு சிறப்புரைகளை பெண்கள் புனர்வாழ்வு நிறுவனத்தைச் சேர்ந்த செல்வி மாலினி, யாழ் மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல், சிறுவர் பாதுகாப்பு நிதியத்தைச் சேர்ந்த வே. ஜெயராசசிங்கம் மற்றும் பலர் பங்குபற்றுகிறார்கள்.

கலந்துரையாடலுக்கு அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் க. கணேசலிங்கம் தலைமை வகிக்கின்றார். (சு)

அகதி முகாம்களில் குடிநீர் தட்டுப்பாடு

(வட்டுக்கோட்டை)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள அகதி முகாம்களின் கிணறுகள் பல வரட்சி காரணமாக தண்ணீர் வற்றுவதனால் அங்குள்ள மக்கள் குடிதண்ணீரின்றி பெரும் கஷ்டப்படுகின்றனர்.

குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டதையடுத்து பாதிக்கப்பட்ட அகதிமுகாம்களைச் சேர்ந்த மக்கள் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்திடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

மக்கள் நியாயமானதும் அவசியமானதுமான குடிநீர் பிரச்னையைத் தீர்த்துவைக்கும் வகையில் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் உதவியுடன் கிணறுகளுக்கு ஊசிக் கம்பியடித்து உதவ முன்வந்துள்ளனர்.

இதற்கான வேலைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. 139)

வடமராட்சியில் விவசாயிகளுக்கு மண்ணெண்ணை

(தாளையடி)

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் பயறு, கௌபி. எள்ளு போன்ற சிறுதானிய பயிர்களை உற்பத்தி செய்துள்ள விவசாயிகளுக்கு முதற்கட்டமாக 2 லீற்றர் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது. (163

பேச்சுப் போட்டி

(கொழும்புத்துறை)

சரசாலை - நுணுவில் ஸ்ரீ சிதம்பர விநாயகர் ஆலய வருடாந்த உற்சவத்தினை முன்னிட்டு சரசாலை இந்து மன்றமும், சரசாலை இந்து இளைஞர் மன்றமும் கூட்டாக இணைந்து பேச்சுப்போட்டி ஒன்றை எதிர்வரும் 23ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை நடாத்தவுள்ளனர்.

இப்போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் நேரில் தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது, (154)

இலங்கை இரு வலயங்களாக பிரிந்து கொண்டிருக்கிறது!

(கொழும்பு)

இலங்கை இருவலயங்களாக பிரிந்து கொண்டிருப்பதாக கொழும்பில் வெளியாகும் பிரபல்யமான தினசரிப் பத்திரிகை ஒன்று கூறியுள்ளது.

இலங்கையின் இரண்டு வலயங்களாகப் பிரிந்துள்ள வடக்கு-கிழக்கும், தெற்கும் இருவேறு பக்கங்களில் சென்று கொண்டிருக்கின்றன. வடக்கு-கிழக்குப் பகுதி போர் வலயமாகவும், தெற்குப் பகுதி அபிவிருத்தி வலயமாகவும் காணப்படுவதாக இந்தப் பத்திரிகை முதல் பக்கத்தில் செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளது. (வி-இ)

மீட்புநிதி சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

நாளை புதன்கிழமை 19ம் திகதி நல்லூர் மங்கையற்கரசி மகா வித்தியாலயத்தில் மாலை 3 மணி தொடக்கம் 4 மணி வரையும் மீட்புநிதி சேகரிக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

இதுவரை காலமும் மீட்பு நிதிக்கடனைச் செலுத்தத் தவறியோர் இக்குறித்த நாளில் தமது மீட்புநிதிக் கடனைச் செலுத்தமுடியுமென தமிழீழ விடுதலைப்புலிகளின் நிதித்துறை அறிவித்துள்ளது. (சி)

முதல் தேர்தல் முடிவில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்சிகளுக்குக் கிடைத்த வாக்குகள் வருமாறு:

ஐக்கிய தேசியக்கட்சி - 527
பொதுசன ஐக்கிய முன்னணி - 463
ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி - 326
நவசமசமாஜக்கட்சி - 05
ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் - 03

பதிவு செய்யப்பட்ட வாக்குகள் 1430, பதிவான வாக்குகள் 1357 நிராகரிக்கப்பட்ட வாக்குகள் 33. (இ)

திருட்டு

(யாழ்ப்பாணம்)

சங்குவேலியைச் சேர்ந்த ப. மகேந்திரதாசன் என்பவருடைய பதினோராயிரம் ரூபா பெறுமதியான "என்பீல்ட்" ரக நீரிறைக்கும் இயந்திரம் தோட்டக் கிணற்றடியிலிருந்து நண்பகல் வேளை திருடப்பட்டுள்ளது.

புத்தளம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காங்கிரஸ் 04
பதிவு செய்யப்பட்ட வாக்குகள் 2836
பதிவான வாக்குகள் 1321

(இ)

முன்னாள் அமெரிக்க அதிபர்

புஷ்ஷை கொலைசெய்ய ஈராக் திட்டம் தீட்டியது

(லண்டன்)

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷை குவைத்தில் வைத்து கொலை செய்வதற்கு ஈராக் திட்டம் தீட்டியதாக குவைத்தின் சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.

திரு. புஷ் கடந்த மாதம் குவைத்துக்கு விஜயம் செய்த போது ஈராக்கின் உளவுப் பிரிவு கார்க்குண்டு வெடிப்பின் மூலம் அவரைக் கொலை செய்ய திட்டமிட்டிருந்ததாகவும் இத்திட்டத்தை குவைத்தின் உளவுப்பிரிவு முறியடித்ததுடன் இக்கொலைத்திட்டம் சம்பந்தமாக குவைத்தில் 17 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் சட்டமா அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். [வி - இ]

போக்குவரத்து கோரி

அரச ஊழியர்கள்

யாழ். செயலகத்தில் முற்றுகை

(மானிப்பாய்)

திருகோணமலை மாவட்டத்தில் பணிபுரியும் அரசஊழியர்கள் அங்கு செல்வதற்கு கப்பல் சேவை ஒழுங்குசெய்து தருமாறு கோரி நேற்று யாழ். செயலகத்தை முற்றுகையிட்டனர்.

புதவருட தினத்தையொட்டி கப்பல் மூலம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த சுமார் 150க்கு மேற்பட்ட ஊழியர்கள் மீண்டும் தமது கடமைகளுக்குசெல்வதற்கு கப்பல் சேவையினை ஒழுங்கு படுத்தித் தருமாறு யாழ் மேலதிக அரசாங்கஅதிபரைக் கேட்டிருந்தனர்.

இவர்களில் 40 பேருக்கு மாத்திரமே தற்போது கூட்டுப்படைத் தலைமை அலுவலகம் அனுமதி வழங்கி இருப்பதாக சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் மூலம் தெரிய வந்துள்ளது. (71 - இ)

க. பொ. த. (சா|த) பரீட்சை

பெறுபேறு மீள்பரிசீலனை விண்ணப்பங்கள்

(யாழ்ப்பாணம்)

க. பொ. த. (சா/த)ரப் பரீட்சை - டிசெம்பர் 1992 பெறுபேறுகளை மீள்பரிசீலனை செய்வதற்கான விண்ணப்பங்களை அனுப்பும் கடைசித் திகதி 1993 - 04 - 30-ம் திகதியாயிருந்தும் இற்றைவரை எதுவித மீள்பரிசீலனை விண்ணப்பங்களும் பரீட்சைத் திணைக்களத்திற்கு கிடைக்கவில்லை என்று பரீட்சை ஆணையாளரிடமிருந்து அறிவித்தல் கிடைக்கப்பெற்றுள்ளது.

பரீட்சைத் திணைக்கள அலுவலர் 1993 - 05 - 21-ம் திகதி கொழும்பு செல்ல இருப்பதால் மீள்பரிசீலனைக்கு விண்ணப்பங்களை அனுப்பியவர்கள் அவ்விண்ணப்பங்களின் பிரதியினையும் (கட்டணமின்றி) இதுவரை விண்ணப்பங்களை அனுப்பத் தவறியவர்கள் உரிய கட்டணத்துடன் உரிய முறையில் விண்ணப்பங்களை 93-05-20ம் திகதிக்கு முன் யாழ். கல்வித் திணைக்களத்தில் நேரில் ஒப்படைக்கவும்.

அஞ்சலில் அனுப்பப்படும் விண்ணப்பங்களும் 1993 - 05 - 20 ம் திகதிக்குப் பின் கிடைக்கும் விண்ணப்பங்களும் பரீட்சை ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்படமாட்டாது. (159-இ)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் [illegible] மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு மே மாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post Office, Sri Lanka under Licence Number [B/10336/B

எதிரணி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளையில் கம்பஹா மாவட்ட வாக்குப் பெட்டிகள் கச்சேரிக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது வாக்களிப்பு நிலைய பிரதிநிதிகளை அழைத்துச்செல்ல மறுப்புத் தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது. (இ

75 சதவீத

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ணப்பட்டன எனவும்தெரிவித்தார்

இம்முறை, தேர்தல் மிக அமைதியான முறையில் நடைபெற்றதென்றும் தேர்தல் ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (வி-இ)

550 முறைப்பாடு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிழித்தல், தீவைத்தல், தகாத வார்த்தைகளால் வைதல், அச்சுறுத்தல், அச்சுறுத்தல் மூலம் பயமுறுத்தல், வேட்பாளர்களை துன்புறுத்தல் போன்ற குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் இந்த முறைப்பாடுகள் கிடைத்துள்ளன (இ)

இரத்தினபுரியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இப்பகுதியில் வாக்காளர்களை வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்லவிடாது இந்தக்குழு தடுத்ததாகவும் கூறப்படுகிறது.

இரத்தினபுரி மாவட்டத்துக்குள் பிரவேசிப்பதற்கு திரு. அசந்தபுஞ்சிநிலமேக்குநீதிமன்றம் ஏற்கனவே தடை உத்தரவு விதித்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

தேர்தல் முடிவுகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலை நிறுத்துவதற்கு வேறு வழிகளைக் கையாளக்கூடும்.

அதாவது ஜனாதிபதி தேர்தலை நிறுத்த வேண்டுமானால் முக்கிய எதிர்க்கட்சிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் கூட்டுச்சேர வேண்டும்.

வருங்காலத்தில் மேற்படி இரு கட்சிகளும் கூட்டுச்சேர்ந்தால் 1977ம் ஆண்டுக்குப் பின்பு எதிர்ப்பக்கத்தில்அமர்ந்திருக்கும் எதிர்க்கட்சிகள் ஆட்சியைப்பிடிக்க, மாகாண சபைகளை தமது தளமாகப் பயன்படுத்தக்கூடுமென்று பி. பி. ஸி, மேலும் தெரிவித்தது. (வி-இ)

ஹம்பாந்தோட்டை

ஐ. தே. க. வென்றது

தென்மாகாணம்- ஹம்பாந்தோட்டை மாவட்டம்:

ஐ. தே. க.	1251
பொதுசன ஐக்கிய முன்னணி	998
ஐ. ஐ. தே. மு.	888
சுயேட்சைக்குழு 1	72
நவசமசமாஜக் கட்சி	37
சுயேட்சை	03
பதிவு செய்யப்பட்ட வாக்குகள்	3,455
பதிவான வாக்குகள்	3,366

(இ)

மாத்தறை மாவட்டம்

சிறிமா கட்சி வெற்றி

தென்மாகாணம்-மாத்தறை மாவட்டம்

பொதுசன ஐக்கிய முன்னணி	1992
ஐ. தே. க.	1487
ஐ ஐ தே. மு.	1,107
இலங்கை முற்போக்கு முன்னணி	33
பதிவு செய்யப்பட்ட வாக்குகள்	4,833
பதிவான வாக்குகள்	4,710

(இ)

அவசரகால சட்ட விதிகள் மீண்டும் அமுலில்

(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தலுக்காகத் தளர்த்தப்பட்ட அவசரகாலச் சட்ட விதிகள், நேற்று நள்ளிரவு முதல் மீண்டும் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

இதன்படி ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்களைக் கட்டுப்படுத்தும் அவசரகால விதிகள் மீண்டும் அமுலுக்குக்கொண்டு வரப்படும்.

இதேவேளையில் மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டு, ஒரு வாரகாலத்திற்கு ஊர்வலம் நடத்தவோ அல்லது அவற்றில் பங்கெடுத்துக் கொள்ளவோ எவரும் அனுமதிக்கப்படமாட்டார்கள் எனப் பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது. (க-இ)

வாக்களிப்பு நிலையம் சரிந்து அறுவர் காயம்

(கொழும்பு)

நேற்று கட்டுநாயக்காவிலிருந்து மாத்தறை வரையிலான பகுதிகளில் கடும் மழை பெய்ததுடன் பலத்த காற்றும் வீசியது.

இதனால் வாக்காளர் பலர் வாக்களிக்க முடியாது இன்னலுற்றனர்,

பாணந்துறையில் கடும் மழையினாலும், காற்றினாலும் வாக்களிப்பு நிலையம் ஒன்று சரிந்து விழுந்ததில் ஆறு பேர் காயமடைந்தனர்.

இவர்களில் ஒருவர் வாக்காளர். மற்ற ஐவரும் வாக்களிப்பு நிலையத்தில் கடமையாற்றிய உத்தியோகத்தர்களாவர்.

மழையினால் பல பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டதால் வாக்காளர் பலர் படகுகளில் சென்று வாக்களித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ)

சர்வதேச அவதானிகள்குழு வாக்களிப்பு நிலையங்களில்

(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தலை அவதானிக்க வந்த சர்வதேச அவதானிப்புக் குழுவினர் 17 மாவட்டங்களைச் சேர்ந்த வாக்களிப்பு நிலையங்களுக்கு நேற்று விஜயம் செய்தனர்.

இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் உட்பட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 25 பேர் இக்குழுவில் இடம்பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. (க-இ)

ஜனாதிபதி, பிரதமர் சிறிமாவோ வாக்களிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி டி. பி விஜேதுங்க கண்டியிலுள்ள தமது வாக்களிப்பு நிலையத்தில் நேற்றுக்காலை வாக்களித்தார்.

பிரதமர் திரு. ரணில் விக்கிரமசிங்க கொழும்பு மாவட்டத்திலுள்ள வாக்களிப்பு நிலையம் ஒன்றில் வாக்குப் பதிவு செய்தார்.

எதிர்க்கட்சித்தலைவியும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சித் தலைவியுமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கம்பஹா மாவட்டத்திலுள்ள வாக்களிப்பு நிலையம் ஒன்றில் வாக்களித்தார்.

திருமதி ஸ்ரீமானி அத்துலத்முதலி கொள்ளுப்பிட்டியிலுள்ள வாக்களிப்பு நிலையம் ஒன்றில் தமது வாக்கைபதிவு செய்தார். (இ)

பிரேமா தொகுதியில் சுறுசுறுப்பான வாக்களிப்பு

(கொழும்பு)

கொலையுண்ட ஜனாதிபதி பிரேமதாசா பிரதிநிதித்துவம் வகித்த மத்திய கொழும்பில் நேற்று பெரும் எண்ணிக்கையான வாக்காளர்கள் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது வாக்களிப்பில் கலந்து கொண்டதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

மழை காரணமாக ஏனைய இடங்களில் வாக்களிப்பு மிக மந்தமாக இடம்பெற்றதாகவும் எனினும் வடமத்திய மாகாணத்தில் வாக்குப்பதிவு மிதமாக இருந்ததாகவும் அச்செய்திகள் மேலும் தெரிவித்தன. (க-இ)